<u>அரக்கோணம் நகராட்சி</u>
<u>சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு</u>

கூட்ட எண்.51 நாள்.27.12.2019.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 31.12.2019 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

அரக்கோணம் நகராட்சி 31.12.2019 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர்(பொ) (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர்/2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோரங்களில் வீடற்று தங்கி உள்ள நபர்களுக்கு தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் (NULM) கணக்கெடுப்பு செய்தும், மேற்படி கணக்கெடுப்பு செய்யப்பட்ட நபர்கள் தங்கிக் கொள்ள இத்திட்டத்தின் SUH ( Shelter for Urban Homeless )-ன் கீழ் நகராட்சிக்குச் சொந்தமாக காலியாக உள்ள இடத்தில் தங்குமிடம் அமைப்பது தொடர்பாக 26.12.2019 அன்று வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந,க,எண்.38038/2013/UPA2, நாள் 25.05.2016-ல் இத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டு வரப்பெற்ற வழிகாட்டுதல் விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- இந்நகராட்சி எல்லைக்கட்பட்ட வார்டு எண்.' A' , பிளாக் எண்.' 10'. நகரளவு எண்கள்.2 (பகுதி) பேருந்து நிலைய இடத்தில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் மத்திய மற்றும் மாநில அரசு வழங்கும் முழுமான்யத் தொகையில் கட்டிடம் கட்டவும். அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்கவும், அதற்கான செலவீனங்களுக்கும் பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும், அதன்பின் இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியில் ஈடுசெய்துக் கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் : 456/2018/எப்1)**

**பொருள் எண் :03**

கூடுதல் இயக்குனர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் அவர்களின் கடித எண் **38038/2013**/UPA2, நாள் **25.05.2016**–ன்படி தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் **(NULM)** திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளின் உடன் வருபவர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கு உரிய கருத்துருக்கள் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. அதன்படி அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தினுள் நோயாளிகளின் உடன் வருபவர்கள் தங்கும்விடுதி கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசுக்கு கருத்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளின் உடன் வருபவர்களுக்குண்டான தங்கும் விடுதி கட்டுவதற்கு நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

***அலுவலக குறிப்பு***: பொதுமக்களின் நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1463/2017/எப்1)

**பொருள் எண் :04**

அரக்கோணம் உள்ளூர்த்திட்டக்குழுமம் பகுதியில் அரக்கோணம் நகர வார்டு எண் சி, பிளாக் எண் **1**, நகரளவு எண். **20/4**– பழைய சர்வே எண் **87,88/1, 2**–ல் அமையும் காலிவாரி கண்டிகை, கைனூர் ரோட்டில் **4.21** ஏக்கர் பரப்பளவிலான இடம் அங்கிகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தின்படி விவசாய பகுதியாக நிலப்பாகுபாடு செய்யப்பட்டுள்ளதை மாற்றி குடியிருப்பு உபயோக பயன்பாட்டு பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்துதரக்கோரி திரு.அனுவவ்குமார் ஜெயின்,இயக்குநர்,பிரவின்குமார் எண்டர்பிரைசஸ்விட்,சென்னை, அவர்கள் கொடுத்துள்ள விண்ணப்பம் நகர் ஊரமைப்புதுறையின் ஒப்புதலுக்கு அனுப்புவதற்கும் மேற்படி நிலப்பயன்மாற்றத்திற்கான மற்ற ஒப்புதல் வழங்க பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு மனுதாரர் நிலப்பயன் மாற்றம் கோருமிடம் அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தின்படி விவசாய பகுதியாக நில உபயோக வகைபாடு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு வடக்கு பக்கம் காவனூர் பஞ்சாயத்துக்குட்பட்ட புஞ்சை சர்வே எண் 442/1, 443/2, 446, 442/2** மற்றும் **447–ல் உள்ள**

**சிவசக்தி நகரில் அமைந்துள்ள சாலை மற்றும் குடியிருப்பு வீடுகள், தெற்கு பக்கம் சர்வே எண் 95, 83, 84 கிழக்கு பக்கம் சர்வே எண் 85, மேற்கு பக்கம் சர்வே எண் 89, மற்றும் 94 உள்ளது. மேற்படி இடத்தின் நகரளைவை ஆவனங்களில் உட்பிரிவு மற்றும் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பெற்றும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் கோரிக்கை சம்மந்தமாக பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் எழுத்து பூர்வமாக வழங்க கோரி தினகரன் நாளிதழில் 16.10.19ம் தேதியன்று தமிழிலும் டெக்கான் கிரானிகல் என்ற ஆங்கில நாளிதழில் 31.10.19ம் தேதியன்றும் ஆங்கிலத்திலும் அறிவிக்கை வெளியிடப்பட்டது. இதனையடுத்து இப்பொருள் சம்பந்தமாக திரு.S.குப்பன்,வழக்கறிஞர், 86, பெரிய தெரு காவனூர் கிராமம் மற்றும் அஞ்சல் மேற்படி புல எண்களில் விட்டுமனைகள் அமைப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்து மனு வரப்பெற்றுள்ளது. மேற்படி இடத்தில் வீட்டுமனைகள் அமைப்பதற்கு விவசாய உபயோகப் பகுதியினை மாற்றி கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து தர மனுதாரர் கோரிக்கையினை நகர் ஊரமைப்புதுறை பரிசீலித்து அனுமதிக்கு சமர்பிக்கலாம்.**

**(ந.க.எண். 245/19/எப்1)**

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழிக்கும் பணிக்கு ஏற்கனவே உள்ள 120 DBC பணியாளர்களை 1.12.2019 முதல் 31.12.2019 வரை பயன்படுத்தி கொள்ளவும் மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ. 13.00 லட்சத்திற்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இந்நிலையில் ஜனவரி–2020 முதல் டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டில் உள்ளதால் பணியாளர்களின் எண்ணிக்கையை குறைத்து 85 DBC பணியாளர்களை 1. 1. 2020 முதல் 30. 6. 2020 வரை ஈடுபடுத்தி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 54.00 லட்சத்திற்கு ஏற்கனவே இந்நகராட்சியில் பணி செய்து வந்த **1)** இன்பம் மகளீர் சுய உதவிக்குழு **2)** ஏஞ்சல் சுய உதவிக்குழு **3)** இளந்தென்றல் மகளீர் சுய உதவிக்குழு ஆகிய மூன்று மகளீர் சுய உதவிக்குழுக்களின் மூலம் பணியாளர்களை பெற்று பணி செய்து கொள்ள நகர மன்ற அனுமதி பெறலாம் ஆணையர் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்.எச்1/2019/1245)**

**பொருள் எண் :06**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பள்ளிகள் குடியிருப்பு பகுதிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் டெங்கு காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குடிநீர் சிக்கனம், மழைநீர் சேகரிப்பு ஆகியவற்றை பொது மக்களிடையே கலை நிகழ்ச்சிகள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.150000/– பொதுநிதியிலிருந்து செலவு செய்துகொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்.எச்1/2019/44)**

**பொருள் எண் :07**

இந்நகராட்சியில் 2019-2020 ஆம் ஆண்டு வரி மற்றும் வரியில்லா இன வசூல் பணி துரிதப்படுத்தவும் பொது மக்களுக்கு வரி உடன் செலுத்த ஒலி பெருக்கி வைத்து விளம்பரம் மேற்கொள்ளவும், இதற்கு தேவையான ஸ்பிக்கர் செட் மற்றும் இதர பொருட்களை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வாங்கிக்கொள்ளவும், இதற்காகும் தோராய செலவினம் ரூ.15,000/–க்கும் மற்றும் 24.12.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் மீது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | நிறுவனத்தின் பெயர் (ம) விலைப்புள்ளி தொகை | | |
|---|---|---|---|---|
| வ. | பொருட்கள் விவரம் | சங்கர் ஆடியோ மணியக்கார தெரு அரக்கோணம் | **SS** சவுண்டு சர்விஸ் சுவால்பேட்டை | ஸ்ரீ கணக துர்கா எலக்டரானிக்ஸ் காந்திரோடு |

| எண். | | | அரக்கோணம் | அரக்கோணம் |
|---|---|---|---|---|
| 1 | அவுஜா **SSA 50–1** | 7200 | 7500 | 7950 |
| 2 | பேட்டரி பேபி செட்–1 | 250 | 350 | 540 |
| 3 | ஸ்பீக்கர் பாக்ஸ் ஸ்பீக்கர் ஒயர் செட் | 2500 | 3140 | 3060 |

மேற்கண்டுள்ளவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் சங்கர் ஆடியோ அரக்கோணம் என்பவர் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கவும் செலவினத்திறக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- அ) மன்றம் அனுமதிக்கலாம்.**

**ஆ) அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சங்கர் ஆடியோ அரக்கோணம் அவர்களுக்கு மன்ற அனுமதி எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியமைக்கும் செலவினத்திற்கும் ஒப்புதல் அளிக்கலாம்.**

**ந.க.எண்.534/2019/அ1**

**பொருள் எண் :08**

தணிக்கை அரக்கோணம் நகராட்சி 2018–19ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் தொகை ரூ.1,07845/– செலுத்துமாறு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, வேலூர் அவர்களால் கோரப்பட்டுள்ளதால், இத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- 2018–19 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை கட்டணம் தொகை ரூ.1,07845/– செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.458/2013/பி2)**

**பொருள் எண் :09**

அரக்கோணம் நகராட்சி விண்டர்பேட்டை மேல்நிலை நீர்தேக்க இடத்திலிருந்து தென்னக இரயிலவேக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கும் குடிநீருக்கு குடிநீர் அளவு மானியை பொருத்தினால் குடிநீர் அளவு மானி (Digital Electro Magnetic Flow Meter) பொருத்தவும், அதனை சார்ந்த பணிகள் மேற்கொள்ளவும் தோராய மதிப்பீடு ரூ.3.40 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும், பணிக்கான தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– அனுமதியளிக்கலாம்**

**ந.க.எண். 887/2018/இ1**

**பொருள் எண் :10**

அரக்கோணம் நகராட்சி பகுதியில் B-Type பேருந்து நிலையம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பேரூந்து நிலையத்தின் அங்கீககாரம் 05.02.2020ல் முடிவடைவதால் இதனை புதுப்பிக்க வேண்டியுள்ளதால் பேரூந்து வளாகத்தில் குடிநீர் வசதி, சாய்வு தளம், (Ramp) மின் விளக்குகள் மற்றும் வர்ணம் பூச்சு பணிகள் செய்ய தயாரிக்கப்பட் மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– அனுமதியளிக்கலாம்**

**ந.க.எண். 887/2018/இ1**

**பொருள் எண் :11**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிக்கப்பட்ட இடங்களில் குடிநீர் பிரதான குழாய் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்பட்டுள்ள பகுதுகளையும்,

உடைப்புகளையும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:— அனுமதியளிக்கலாம்.**

**ந.க.எண். 887/2018/இ1**

**பொருள் எண் :12**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21—ல் உள்ள காந்தி நகர் நகராட்சி பள்ளி வளாகத்தில் கூட்ட அரங்க மேடை, பாதுகாப்பு கிரில் மற்றும் சத்துணவு கட்டிடம் பராமரிப்பு பணி மின்சார ஒயரிங் வேலைகள், மின் விளக்கு, மின் வசதி மற்றும் தரை உயர்த்தி அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.50—ற்கு அனுமதிக்கும் இப்பணியினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:— மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண். 887/2018/இ1**

**பொருள் எண் :13**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04—ல் TNHB விளையாட்டு அரங்கத்தில் மாண்புமிகு அமைச்சர் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்களின் நலத்திட்டங்கள் வழங்கும் விழா TNHB பகுதியில் நடைபெற உள்ளதால் பொது மக்களின் போக்குவரத்துக்கும், சேதமடைந்த சாலைகளை புதுப்பிக்க வேண்டியுள்ளது மேலும் நலத்திட்டங்கள் வழங்க வருகை தர இருப்பதால் முதலமைச்சஅமைந்துள்ள இதற்கான மதிப்பீடு ரூ.4.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசியம் கருதி பணியினை நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.P.வீரராகவன் அவர்கள் மூலம் பணியை செய்து முடித்ததை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :14**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 25வது வார்டு, விண்டர்பேட்டை, ப.உ.சண்முகம் சாலையில் மழைநீர் கல்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/—ற்கு அனுமதிக்கும். மேற்கண்ட பணியினை 2019—2020 பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு:— அனுமதியளிக்கலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :15**

அரக்கோணம் நகராட்சி பகுதியில் உள்ள டவுன் ஹால் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய கட்டிட பராமரிப்பு பணி செய்ய, திட்ட இயக்குநர், ICDS. வேலூர் மாவட்டம் அவர்கள் தெரிவித்ததை தொடர்ந்து மேற்கண்ட பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய கட்டிடத்தில் உள்ள பழுதுகளை சீர் செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதியும், மேற்கண்ட பணியினை கல்வி நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:— அனுமதியளிக்கலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :16**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அன்றாடம் சேதரம் ஆகும் குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக மாற்றுவதற்கு பசுமை உரக் குழல்கள் நகராட்சி பகுதிகளில்

1) சோமசுந்திரம் நகர் 2) ரத்தன்சந்த் நகர் 3) சிவபாதம் நகர் முன்று இடங்களில் அமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த பசுமை உரக் குழல்களில் ஈ பிடிக்கும் இயந்திரம் (Fly Catcher) காற்று போக்கி, (Ventilator), கல்லடை(Silver) மற்றும் இதர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– அனுமதியளிக்கலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :17**

இந்நகராட்சியில் 2019–2020ன் கீழ் 22.11.2019ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | வார்டு எண்.3 கணேஷ் நகர் 1 –வது குறுக்கு தெரு மற்றும் 2–வது குறுக்கு தெருவில் தார் சாலை அமைத்தல். | **9.80** | திரு.ஜி.தாமோதரன் | 0.16% | திரு.கே.வாசு | 1.50% |
| 2 | வார்டு எண்.06 டவுன் ஹால் 6–வது தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல். | **3.00** | திரு.ஜி.தாமோதரன் | 0.03% | திரு.கே.வாசு | 1.75% |
| 3 | வார்டு எண்.06 நேரூஜி நகர் 3 மற்றும் 8–வது தெருவில் உள்ள சிமெண்ட் சாலை பழுது பார்த்தல் மற்றும் 1 Hp நீர் மூழ்கி மோட்டார் மற்றும் கேபிள்கள் விநியோகம் செய்தல் | **3.50** | திரு.வி.சதிஷ்குமார் | 0.02% | திரு.பி.வீரராகவன் | 0.40% |
| 4 | வார்டு எண்.14 வெள்ளைக்குளம் 7–வது தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல். | **3.00** | திரு.ஜி.தாமோதரன் | 0.02% | திரு.கே.வாசு | 1.13% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 4 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2018**

**பொருள் எண் :18**

அரக்கோணம் நகராட்சியில் நடைபெற உள்ள உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கு முன் ஏற்பாடுகளான வாக்குப் பதிவு அயந்திரங்கள், படிவங்கள் மற்றும் தேவையான பொருட்களை பிரித்து

வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்ப ஏதுவாக ஒலிபெருக்கி அமைப்பு, தடுப்புகள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையத்தில் வாக்கு பதிவு அயந்திரங்களை வைக்க Strong Room அமைப்புகள், உரிய வரைபடங்ளின் படி மற்றும் வாக்கு எண்ணிக்கையின் போது தேவையான டேபிள், சேர், தடுப்பிகள் மின் விளக்குகள், Stage ஒலிபெருக்கி அமைப்புகள், வெளிப்புறம் தேவையான தடுப்புகள் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.**5.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– அனுமதியளிக்கலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :19**

அரக்கோணம் நகராட்சியில் நடைபெற உள்ள உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கு தேவையான அங்கீகரிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகள் தேர்தல் சமயத்தில் வாக்கு சாவடிகளில் தேவையான அடிப்படிட வசதிகளான பள்ளி கட்டிடங்களில் மின்சார வசதி மின் விளக்குகள், மின் விசிறி, சார்மினார் பத்தல் குடிநீர் வசதி டேபிள், சேர், 5Amps, Plug Point மற்றும் பதட்டமான வாக்கு சாவடிகளில் தேவையான தடுப்புகள் ஆகிய வசதிகளை வார்டு எண்.**1** முதல் **36** வரையில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளில் ஏற்படுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.**7.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– அனுமதியளிக்கலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :20**

இந்நகராட்சியில் **2019–2020**ன் கீழ் **17.10.2019**ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | தெரு விளக்கு பராமரிக்கு வாகனம் ஹைட்ராலிக் லேடர் TN 73 W 8881 பராமரிப்பு பணிகள் செய்தல். | **1.00** | வெங்கடேஸ்வரா இன்ஜினியரிங் | 0.41% | வேலு மோட்டார்ஸ் | 3.60% |

அலுவலக குறிப்பு : வரிசை எண். 1ற்கான பணிக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .887/இ1/2018

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**